



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்


An Unit of the e magazine Voice of Jagadguru)

## சுவர்ண பாரதீ மஹோத்ஸவம்
## சிறப்பு இதழ்

### பட்டாபிஷேக வைபவத்தன்று (19.10.89) சிருங்கேரியில் ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை (தமிழாக்கம்)

வந்தே குரூணாம் சரணாரவிந்தே ஸந்தர்சிதஸ்வாத்மஸுகாவபோதே
ஜனஸ்யயே ஜாங்கலிகாயமாநே ஸம்ஸார ஹாலாஹல மோஹசாந்த்யை

ஸ்ரீ பகவத்பாதருடையவும், லோகமாதா ஸ்ரீ சாரதா பரமேச்வரியினுடையவும் அருளினால் ஸ்ரீ சங்கரபகவத் பாதாளால் ச்ருங்கேரியில் ஸ்தாபிக்கப்பட்ட தக்ஷிணாம்னாய ஸ்ரீசாரதாபீடம் அவிச்சின்னமான குரு பரம்பரையுடன் கூடியதாக விளங்குகிறது.



நாம் நினைவில் என்றும் போற்றும் நமது பெருமதிப்புக்குரிய ஸ்ரீ ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் இந்த ஆசார்ய பரம்பரையில் மகுடமணியாக விளங்குவதோடு தமது பெயரை நிலைநாட்டும் வகையில் சிறந்து விளங்கி வந்தார்கள். இந்தியாவில் பல்வேறு பாகங்களிலும் பரவியுள்ள பெருவாரியான பக்தர்களின் மதிப்பு, மரியாதை, பேரன்பு மற்றும் நம்பிக்கைக்கும் பாத்திரர்களாக விளங்கியுள்ளார்கள். அப்பேற்பட்ட சிறந்த ஞானியின் சிஷ்யர்கள் என்று கூறிக்கொள்வதிலே நாம் மிகவும் பெருமையடைகின்றோம்.

நம் ஸ்நாதன் தர்மத்தைப் பரப்புவதற்காக ஆதிசங்கரபகவத்பாதாளால் ஸ்ரீச்ருங்கேரி சாரதா பீடம் நிறுவப்பட்டுள்ளது. நம் நாட்டில் ஸநாதன தர்மம் தழைத்தோங்கியிருக்கும் காலம் வரை நாடு செழிப்புற்று விளங்கும்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

தர்மத்திற்குரிய இடம் இல்லாது போனால், நாடு தழைக்காது. எவ்வளவுதான் விஞ்ஞானரீதியிலே நாம் முன்னேறினாலும். எவ்வளவுதான் பொருளாதாரத்துறையிலே நாம் சிறந்து விளங்கினாலும், தர்மத்திலே நாம் அவநம்பிக்கை வைத்து, அதை வெறுப்போமானால் நாம் பெரிய அபாயத்தில் சிக்குவதோடு. நமக்கு பெரிய அழிவைத் தேடிக்கொள்வதாக அமையும். நம் நாட்டிலே நாம் விஞ்ஞான, பொருளாதார ரீதியில் முன்னேறிச் செல்லும் போது நம் வாழ்க்கையில் தர்மத்திற்கு என்ன இடம் இருக்கப்போகிறது? என்று சிலர் கேட்கிறார்கள். தர்மத்தின் இயல்பையும், தர்மத்தின் சிறப்பையும், தர்மத்திற்கு உறைவிடமான வேதத்தின் தன்மையையும் அறியாத காரணத்தால் இம்மாதிரி கேள்விகள் கேட்கப்படுகின்றன. நம் இந்தியக் கலாசாரத்தைப் பற்றிய நம் அறியாமையை புலப்படுத்துவதாக இக்கேள்விகள் அமைந்துள்ளன. தாம் நினைப்பதுதான் சரியென்று எண்ணும், புத்தி பேதலித்த மனிதர்கள் இத்தகைய கேள்விக்கணைகளை தொடுக்கிறார்கள்.




பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன், வேதம் முழங்கியது."தர்மோ விச்வஸ்ய ஜகத: பிரதிஷ்டா". (அகிலம் முழுவதற்கும் நிலையான தன்மைக்கும் உயிருடன் விளங்கும் தன்மைக்கும் ஆதாரமானது தர்மம்) என்று. ஸ்ரீகிருஷ்ண பகவான் பகவத் கீதையில் கூறியுள்ளதை நாம் என்றும் மறக்கலாகாது.

தேவான் பாவயதாநேந தே தேவா பாவயந்து வ: !<br>
பரஸ்பரம் பாவயந்த: ச்ரேய: பரம் அவாப்ஸ்யத !!

நாம் இவ்வாறு தேவர்களை போஷிக்க, தேவர்கள் நம்மை போஷிக்கிறார்கள். ஒருவருக்கொருவர் போஷிப்பதன் மூலம் பெரும் சிறப்பு எய்தப்படுகிறது.


வேத உருவில் பகவான் நமக்கு தர்மத்தை அருளியுள்ளார். தர்மம் என்னவென்று நமக்குக் கூறியுள்ள அறிவுரை தான் வேதம். சிலர் வினவலாம், "கடவுள் நம் முன் தோன்றுகிறாரா? நம் முன் வந்து அவர் ஏதாவது கூறுகிறாரா என்ன? கடவுளின் அருளுக்கு என்ன அர்த்தம்? பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காகச் சிலர் கூறிய கூற்றாக இவை தென்படுகின்றன". இந்த நவீன காலங்களிலே சில புத்திசாலிகள் இம்மாதிரியாகக் கூறலாம். கடவுளின் அருள் என்பது என்னவென்று நம் முன்னோர்கள் நமக்குத் தெளிவு படக்கூறியுள்ளனர்.



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ந தேவா தண்டமாதாய ரக்ஷந்தி பசுபாலவத்
யம் ஹி ரக்ஷிதுமிச்சந்தி புத்யா ஸம்யோஜயந்தி தம்

மாடுகளை மேய்ப்பவன் தன் கையில் கோலுடன் மாடுகளை விரட்டுவது போன்று கடவுள் தோன்றுவதில்லை. 'யம் ஹி ரக்ஷிதுமிச்சந்தி புத்யா ஸம்யோஜயந்தி தம்" நாம் நற்செயல் ஆற்றுவதற்குரிய ப்ரேரணையை பகவான் அருளுகிறார். நாம் விரும்பும் எச்செயலுக்கும் ஓர் உள்ளுணர்வு நம்மை உந்துகிறது. அவ்வாறின்றி நாம் செயல்படுவதில்லை. இந்த உந்துதலை கடவுள் நமக்கு, அருளுகிறார். அவன் அருளன்றி நற்செயல்கள் செய்வதிலே நாம் உந்தப்படுவது எங்ஙனம்? நாம் தீய செயல்கள் செய்யும் போது ஏற்படும் உந்தலுக்கு காரணம் என்ன? அதுவும் கடவுளால் தான் ஏற்படுகிறது. அவ்வாறானால். நாம் மிகவும் பெரிய நிலையில் வைத்துள்ள கடவுள், நம் பக்திக்கும் வழி பாட்டுக்கும் உரியவரான பகவான் நம்மை தீய செயல்கள் செய்ய ஏன் தூண்ட வேண்டும்? இதற்கு நம் சாஸ்திரங்கள் கூறுவது என்னவெனில், "புண்யோ வை புண்யேன கர்மணா பவதி பாப: பாபேன" நாம்முன் பிறவியில் செய்த கர்ம பலன்களை அனுபவித்தே தீரவேண்டும். அதற்காக உரிய ப்ரேரணைகளை (நல்லதோ, கெட்டதோ) நமக்கு பகவான் அளிக்கிறார். இதற்காக கடவுளை நாம் குற்றம் சாட்டவோ, நிந்திக்கவோ முடியாது.



இம்மாதிரியாக முன் பிறவியில் செய்த கர்மாக்களின் பயனை இப்பிறவியில் அனுபவிப்பது, இப்பிறவியில் செய்த தர்மங்களின் பயனை அடுத்த பிறவியில் அனுபவிப்பது என்ற இந்த தொடர்பு தொன்றுதொட்டே இருந்து வருகிறது. இந்த சம்சாரத்தின் தொன்மையை பகவான் வேதவியாசர் தன்னுடைய பிரம்ம சூத்ரங்களிலும், ஸ்ரீ சங்கர பகவத்பாதர் இந்த சூத்ரங்களுக்கான தன்னுடைய உரையிலும் விளக்கியுள்ளார்கள். ஆகவே, சம்சாரமாகிற இந்தத் தொடர்பு ஓட்டத்திலே ஒருவன் தனது செயல்களின் பயன்களை அனுபவிப்பது என்பது முறையற்றதாகவோ சாஸ்திர விரோதமாகவோ ஆகாது. ஆகவே கடவுளின் அருளைப்பெற ஆர்வமாக உள்ள நாம், கடவுளை திருப்தி செய்து சந்தோஷப்படுத்த விரும்பும் நாம், அந்த கடவுளால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தர்மத்தின் கொள்கைகளைத் தான் கடைப்பிடிக்க வேண்டும். கடவுள் நமக்கு பகுத்தறியும் சக்தியைக் கொடுத்திருக்கிறார். ஆகவே அதை சரியான முறையில் உபயோகிப்பது நம் பொறுப்பாகும். அதை சரியான முறையில் பயன்படுத்தாவிடில் தவறு நம்முடையதேயாகும்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

புராதன காலத்து முனிவர்கள் இதை ஓர் உதாரணம் மூலம் விளக்கியுள்ளார்கள். ஓர் தகப்பனார் தன் மகனுக்கு போரில் பயன்படுத்துவதற்காக ஓர் வாளை கொடுத்தார். ஆனால், அந்த வாலிபன் அதை கொடுக்கப்பட்ட நோக்கத்திற்காக அதாவது விரோதியை எதிர்ப்பதற்காக பயன்படுத்தவில்லை. ஆனால் அந்த வாளைக் கொண்டு தன் கழுத்தையே வெட்டிக்கொண்டு விட்டான். இது யாருடைய குற்றம்? இது அந்த தகப்பனாரின் குற்றமா? அல்லது உரிய பயனுக்காக அந்த வாளை உபயோகிக்காத அந்த மகனின் குற்றமா? அவன் அதை உகந்த காரணத்துக்காக பயன்படுத்தாமல் தவறான முறையில் உபயோகித்து தனக்கே அழிவை தேடிக்கொண்டு விட்டான். அது போன்று தர்ம நெறியை பின்பற்றுவதற்காகக் கொடுக்கப் பட்டுள்ள பகுத்தறிவைச் சரியான முறையில் உபயோகித்துப் புனித நூல்களிலே கூறப்பட்டுள்ள அறிவுரைகளைப் புரிந்து கொள்ளாமல் நமக்கே நாம் தீங்கு செய்து கொள்வோமேயானால் அது யாருடைய குற்றம்?.



"யாவஜ்ஜீவம் சுகம் ஜீவேத்
ருணம் க்ருத்வா க்ருதம் பிபேத்"

அதாவது, உயிருள்ளவரை வாழ்க்கையை நன்கு அனுபவி: கடன்பட்டாகினும் நெய்யைப் பருகு என்று வாழ்க்கை நடத்தி நம்முடைய செயல்களை யாரும் கவனிக்க மாட்டார்கள் என்று எண்ணி நம்மை நாமே ஏய்த்துக் கொள்வோமானால் அதற்கு யார் பொறுப்பாளியாவார்கள்? ஆகவே, மனிதன், கடவுளால் அருளப்பட்ட இந்தப் பகுத்தறிவின் சக்தியை உபயோகித்து நம் செயல்முறைகளைத் தீர்மானித்து நம் முன்னோர்கள் தர்ம நெறியை நம்முடைய நன்மைக்காகத்தான் வகுத்துள்ளார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர்களது அறிவுரைகளை பின்பற்றி நடக்க வேண்டும்.

சில சமயங்களில் நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற வகையில் நமக்கு சந்தேகம் ஏற்படலாம். ஒவ்வொருவனுக்கும் சாஸ்திரங்களை ஆராய்ந்து தம் சந்தேகத்தைத் தவறில்லாமல் நிவர்த்தித்துக் கொள்ளும் திறமை இருந்துவிட முடியாது. இத்தகைய நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும். என்று

உபநிஷத்துக்கள் கூறியுள்ளன. சாஸ்திரங்களைப் படித்து உன் சந்தேகங்களைத்தெளிவுபடுத்திக் கொள்ளும் திறமை உனக்கு இல்லையானால், நீ பெரியோர்களின் வழியைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

பெரியோர்கள் என்றால் நல்ல அறிவாளிகளும், சாஸ்திரங்களை ஆராய யோக்யதையுள்ளவர்களுமே ஆவார்கள். அவர்கள் வழி நீயும் செல்லலாம். அவ்வழியே சென்றால் நீ சிரேயஸை அடைவாய் என்று உபநிஷதங்கள் கோஷிக்கின்றன. இந்நாளில் அநேகம் பேர்களுக்கு சந்தேகங்கள் வருகின்றன. எல்லோருக்கும் சாஸ்திரங்களை ஆராய்ந்து சந்தேக நிவிருத்தி செய்துகொள்ளுதல் சாத்யமாகாது. அந்நிலையில் முன்னோர்கள் வழியையே சிறிதும் விசுவாசம் குறையாமல் பின்பற்ற வேண்டும் அதுவே நமக்கு சிரேயஸைக் கொடுக்கும் என்ற திட நம்பிக்கையுடன்

"யேநாஸ்ய பிதரோ யாதா: யேந யாதா: பிதாமஹா:
தேந யாயாத்ஸதாம் வர்த்ம தேந கச்சந் ந துஷ்யதி"



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

உன் தகப்பன், பாட்டன் மற்றும் உன் முன்னோர்கள் பின்பற்றின வழியே உனக்கும் சிறந்ததாகும். முன்னோர்கள் யோசனையில்லாமல் சில காரியங்கள் செய்தார்கள் என்று நாம் சொன்னால், நாம் அவர்களைக் காட்டிலும் புத்திமான்கள் என்று எண்ணி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுகிறோம். நம் முன்னோர்கள் அறிவற்றவர்கள் நாம் தான் அறிவாளிகள் என்று எண்ணிக்கொண்டிருந்தால் அதைவிட அறியாமை வேறொன்றுமில்லை. நம் முன்னோர்கள் தீர்க்கமாக யோசனை செய்யாமல் நாம் செல்லவேண்டிய வழியை வகுக்கவில்லை. தங்கள் அறிவு காட்டிய வழியில் தர்மத்தைப் பின்பற்றி அவர்கள் சிரேயஸை அடைந்தார்கள். ஆகையால் நாமும் அவர்களை பின்பற்றி அவ்வழியில் தான் செல்ல வேண்டும் என்ற தீர்மான புத்தியுடன் இருக்க வேண்டும்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் குறிக்கோள் தர்ம பிரசாரம் எப்பொழுதும் நடந்து கொண்டேயிருக்க வேண்டும் என்பதே. நற்செய்கைகள் காலமுள்ளளவும் தொடர்ந்து நடக்க வேண்டும் என்பதே அன்னாரின் கனவு. நாம் அறிந்த தத்வஞானிகளுள் ஸ்ரீசங்கரரைப்போல் உயர்ந்தவர் யாருமில்லை என்றால்




மிகையாகாது. குறுகிய 33 வயதிற்குள் கன்யாகுமரியிலிருந்து காச்மீரம் வரை தர்ம பிரசாரம் செய்தது மட்டுமில்லாமல்,சதுராம் நாய பீடங்களையும் ஸ்தாபித்ததிலிருந்து, சங்கரரின் ஒப்பில்லா அறிவாற்றலும் தீர்க்கதரிசனமும்

வெளிப்படவில்லையா? அந்த அறிவாற்றலின் விளைவுதான் புனித சிருங்கேரியில் ஸ்தாபிக்கப்பட்ட தக்ஷிணாம்நாய சாரதா பீடம். பிரம்மவித்யா ஸ்வரூபிணியும் எல்லா அறிவுக்கும் உறைவிடமுமான ஜகன்மாதா ஸ்ரீசாரதாம்பிகையை இங்கு (சிருங்கேரியில்) பிரதிஷ்டை செய்தார். எந்த சிரேஷ்டமான முகூர்த்தத்தில் இந்த பீடத்தை நிறுவினார் என்று அறிய நமக்கு ஆற்றல் இல்லை. அவிச்சின்ன பரம்பரையாக இப்பீடத்தின் ஆசார்யர்கள் வந்ததிலிருந்தே அந்த வேளையின் உயர்வு தெரிகிறது. இம்மடத்துக்கு எவ்வளவோ கஷ்ட நிலைமைகளும், இக்கட்டுகளும் வந்திருக்கின்றன. இந்த காலகட்டங்களிலும் அவிச்சின்னமான குரு பரம்பரை பாதிக்கப்படாமல் தடங்கலில்லாமல் நம் காலம் வரை வந்திருக்கிறது.

சிருங்கேரி மடத்தின் சரித்திரத்தில் கர்நாடக சாம்ராஜ்ய பிரதிஷ்டாபனாசார்யர் என்று புகழ்பெற்ற ஸ்ரீ வித்யாரண்யரின் காலம் ஓர் பொற்காலம் என்பதை யார் தான் அறியார்? பலர் என்னிடம், விரக்தியை மேற்கொண்ட ஓர் சந்யாசிக்கு இம்மாதிரி பட்டாபிஷேகம் நடப்பதெல்லாம் முரணாக இல்லையா? என்று கேட்டார்கள். இம்மாதிரி சடங்குகள் லோக விஷயங்களில் மூழ்கியுள்ளவர்களுக்கு பொருந்துமேயல்லாது அதற்கு நேர்மாறான முற்றும் துறந்த சந்யாசிக்குப் பொருந்துமா என்று கேட்டார்கள்.



உண்மையில், ஸ்ரீ சங்கர பகவத்பாதர் காலத்திலும். அதையடுத்த காலத்திலும் அரச சின்னங்களோ, பட்டாபிஷேகம் போன்ற வைபவங்களோ சிருங்கேரி ஆசார்யர்களுக்கு இருந்ததில்லை.ஸ்ரீசங்கர பகவத்பாதர் காலம் முதல் ஸ்ரீ வித்யாரண்யர் காலம் வரை நம் ஆசார்யர்கள் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்வதிலும் ஞானத்தை நாட வந்தவர்களுக்கு அதற்குரிய வழி காட்டுவதிலுமே ஈடுபட்டிருந்தார்கள். கர்நாடக சிம்மாஸன பிரதிஷ்டாபனாசார்யரான ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகளும் கூட மஹா தபஸ்வியாகவே இருந்தார். இதை மனதில் கொள்ள வேண்டும். மற்ற ஆசார்யர்கள் ஏன் வித்யாரண்ய ஸ்வாமிகள் போல வெளி ராஜ்ய விவகாரங்களில் ஈடுபடவில்லை என்று பலர் கேட்கிறார்கள். ஸ்ரீவித்யாரண்ய சுவாமிகள் கூட வெளி விவகாரங்களில் முழுவதும் ஈடுபட்டார் என்பதற்கு ஆதாரமில்லை.

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

## ஸத் ஸம்ப்ரதாயம்


An Unit of the e magazine Voice of Jagadguru)

ஹக்கனும் புக்கனுமே ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகளைத் தேடிவந்தார்களேயன்றி சுவாமிகள் அவர்களை தேடிப் போகவில்லை. ஸ்ரீ வித்யாரண்யர் அவர்களை அனுக்ரஹித்தார். தன் அறிவாற்றலாலும் தபோ பலத்தாலும், அவர்களுக்கு கர்நாடக ஆதிபத்தியத்தை பெற்றுத் தந்தும் தான் தபஸில் ஈடுபட்டு சந்யாசியாகவே இருந்தார். குருவின் அனுக்கிர ஹத்துக்கு நன்றி கூறும் வகையிலும் ஹிந்து தர்மத்துக்கு வணக்கம் கூறும் வகையிலும், அவர்கள் (ஹக்கனும், புக்கனும்) தங்கள் ராஜ சின்னங்களை ஸ்ரீவித்யாரண்யர் சரணாரவிந்தங்களில் ஸமர்ப்பணம் செய்தனர், குருவானவர் தம் சிஷ்யர்களின் மனம் புண்படும்படி நடந்து கொள்ளக் கூடாது என்ற ரீதியில் ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகளும் அவர்களை திருப்திப்படுத்த அவர்கள் ஸமர்ப்பணம் செய்த ராஜமரியாதை சின்னங்களை ஏற்றுக் கொண்டார். அவைகளை அவர் விரும்பினார் என்றோ அவைகளை தேடிச்சென்றார் என்றோ கருதினால் அது தவறு. ஸ்ரீ வித்யாரண்யர் அடிச்சுவட்டை பக்தியுடன் பின்பற்றிவரும் சிருங்கேரி ஆசார்யர்கள் ஒவ்வொருவரும் இந்த ராஜ மரியாதை சின்னங்களை ஸ்ரீ வித்யாரண்யரைப் போல ஏற்று வகித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்.




ஆகையால் யாராவது இந்த பட்டாபிஷேக வைபவங்கள். ஆசார்யர்களால் விரும்பப்பட்டு செய்யப்படுகின்றன என்று நினைத்தால் அது தவறு. ஆசார்யர்களுக்கு இதில் ஒன்றும் மோஹம் கிடையாது. ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் அத்வைத உபதேசங்களில் ஸதா ஈடுபட்டிருக்கும் ஆசார்யர்களுக்கு இவ்வித ஆசைகளை கற்பிப்பது மூடத்தனமாகும். சிஷ்யர்களை சந்தோஷப்படுத்துவது குருவின் கடமை என்பதினாலும் பாரம் பரியத்தை அனுசரிக்கவேண்டியும் நாம் இந்த (பட்டாபிஷேக) வைபவத்துக்கு இசைந்தோம். இதற்கு வேறு ஒரு காரணமும் இல்லை, எதிர்பார்ப்பும் இல்லை.

நம் குருநாதர் ஒன்றிலும் பற்றுதலில்லாமல் உண்மையான துறவியாகத் திகழ்ந்தார். நம் குறிக்கோளும் அதுவே. அதுவே விரும்பத்தக்கதாகவும் பின்பற்றத் தகுந்ததாகவும் இருக்க வேண்டும். அதே சமயம், குருவின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதும், சிஷ்யர்களின் மனதை புண்படுத்தாமல் அவர்கள் அபீஷ்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற காரணமுமே நாம் இந்த இன்றைய வைபவங்களுக்கு இசைந்தது. குருவின் வழி நடந்து அவர் விதித்த வழிகளைப் பின்பற்றி ஸ்ரீசாரதா பரமேசுவரியை வழிபட்டு அத்தேவியின் அருளைப் பெற வேண்டும் என்பதே நம் தீர்மானமான குறிக்கோள்.



# Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



சிருங்கேரி ஜகத்குரு மஹாஸம்ஸ்தானத்தின் தீவிர சிஷ்யர்கள் அநேகம் பேர்கள் இந்த வைபவத்துக்காக இங்கு வந்து குழுமி இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக நான் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. பரம்பரை வழிவந்த இந்த சிருங்கேரி ஆசார்யர்கள் மேலுள்ள உங்கள் பக்தியும், ஶ்ரீசாரதா பரமேசுவரியிடம் கொண்டுள்ள பக்தியும் உங்களுடன் மேன்மேலும் வளர்ந்து உங்கள் சந்ததியினரிடமும் பரவி நிற்கட்டும்.

இந்த சுபவேளையில் சிருங்கேரி வாழ் ஜனங்களின் அன்பும், பக்தியும் எம்மை திக்குமுக்காடச் செய்துவிட்டன. வெளியூர்களிலிருந்து வருகை தந்த சீடர்கள், சிருங்கேரி ஜகத்குரு பீடத்தின் பால். சிருங்கேரி வாழ் ஜனங்கள் கொண்டுள்ள பக்தியையும், ஈடுபாட்டையும் கண்டு வியப்புறுகிறார்கள்.

"அதி பரிசயாத் அவஜ்ஞா ஸந்ததகமனாத் அனாதர: " என்பது ஒரு ஸம்ஸ்கிருத பழமொழி. அதாவது கூடவே இருந்தால் கசப்பு வளரும் என்பதே. ஆனால் சிருங்கேரி வாழ் மக்கள் இதற்கு விலக்கு. குருவை மிகுந்த பக்தி பாசத்தோடு வரவேற்கிறார்கள். குருசேவை செய்யத் திகட்டாத ஆர்வம் கொண்டும் இருக்கிறார்கள். நம் பரிபூர்ண அனுக்ரஹ ஆசிகளை அவர்களுக்கு வழங்குகிறோம். ஹரிஹரபுரம், சிவகங்கை, நெலமாவு மடாதிபதிகளும், அபிமானத்துடன் இங்கு வருகை தந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் வாழ்த்துக்களை வழங்குகிறோம்.

பாரதத்தின் பல பாகத்திலிருந்து வருகை தந்திருக்கும் நம் சிஷ்யர்கள் தான் இந்த உத்ஸவத்தின் மேன்மைக்கு காரணமாதலால் அவர்களுக்கும் எமது ஆசிகள். இந்த வைபத்தின் உயர்வுக்கு ஒரு தனி மனிதன் முயற்சி காரணமல்ல, டில்லி, கல்கத்தா, பம்பாய், பூனா, மதராஸ், ப்ங்களூர், ஹைதராபாத், ராஜபாளையம் முதலிய இடங்களிலிருந்து பக்தர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் அவ்வளவு தூரங்களிலிருந்து ஏன் வரவேண்டும் என வியப்புறலாம். ஓர் புதிய தேசத்தையோ, இடத்தையோ, ஜனங்களையோ காண்பதற்காக அவர்கள் வரவில்லை. தங்கள் குருவையும் மடத்தையும் தரிசிக்கவே அவர்கள் வந்திருக்கிறார்கள். ஆகவே நாம் அவர்களுக்கு இந்த குருபக்தியும் மடத்தின்மேலுள்ள அபிமானமும் என்றென்றும் நிலைத்து நீடித்திருக்க அனுக்ரஹிக்கின்றோம். நம் குருநாதரின் சரணாரவிந்தங்கள் நம் ஹிருதயத்தில் நிலைத்திருந்து நம்மை நல்வழியில் நடத்திச் செல்லுமாறு பக்திபூர்வமாக ப்ராத்திக்கிறோம். நம் ஆசார்ய பரம்பரை, நம் குருநாதர், நம் ஆராத்ய தெய்வங்களான ஶ்ரீசந்திர மௌலீசுவரர் ஜகன்மாதா ஶ்ரீ சாரதா பரமேசுவரி இந்த

சக்திகள் சரியான பாதையில் செல்வதற்கான மனோதிடத்தையும், நம்



பொறுப்புகளை திறமையுடன் வகிக்க சக்தியையும் அருளுமாறு திரும்பத் திரும்பப் பிரார்த்திக்கிறோம். உங்கள் எல்லோருக்கும் எம் அனுக்கிரஹ ஆசிகளை மறுபடியும் வழங்கி எம் பாஷணத்தை முடித்துக் கொள்ளுகிறோம்.

ஹர நம: பார்வதீ பதயே!
ஹர ஹர மஹாதேவ
ஜானகீ காந்த ஸ்மரணம்!
ஜய ஜய ராம ராம

Our Mail ID: Info@voiceofjagadguru.com

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

தானம் கொடுப்பது சிலாக்யமானது. ஆனால் அதை ஆத்மப்ரசாரத்துக்காக செய்யக்கூடாது. धर्मः क्षरति कीर्तनात् என்று சாஸ்திரம் கூறுகிறது. தானம் கொடுப்பதை பறைசாற்றினால் தானத்தின் புண்யத்தை இழந்து விடுகிறோம் .



அதேபோல், अतिथि देवो भव, நம் அதிதிகளை அன்புடன் வரவேற்க வேண்டும். மேலும் अभ्यागतः स्वयं विष्णुः, ஒரு பெரிய மனிதன் நம் வீட்டுக்கு அழைப்பு இல்லாமலே வந்தால், அதை நாம் பெரிய அதிர்ஷ்டமாக கருத வேண்டும். இவ்வாறு, நல்லதை செய்து விட்டு அதற்கான பெருமையை ஸ்வீகரிக்காமல், நாம் அடக்கத்துடன் இருக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் நமக்கு யாரேனும் எப்பொழுதாவது உதவி செய்திருந்தால், அதை நாம் ஒருபொழுதும் மறக்கக்கூடாது. நமக்கு மற்றவர்கள் செய்த நன்மைகளை மறந்துவிடுவது பெரிய பாபம். कृतघ्ने नास्ति निष्कृतिः, அந்த பாவத்துக்கு பிராயச்சித்தம். கிடையாது.

பகவத் கிருபைதான் நமக்கு ஐஸ்வர்யத்தை கொடுக்கிறது. அதை பகவத் சேவைக்கும் மற்றவர்களுக்கு நன்மைகள் செய்வதற்கும் உபயோகப்படுத்துவது அதி உசிதம். மாறாக கர்வத்தை வளர்த்து நம் ஆஸ்திகளை துஷ்பிரயோகம்

செய்வது முட்டாள்தனம். பணக்காரனாக இருந்தாலும் ஒருவன் கர்வத்தை தவிர்த்து நல் முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

ஒரு பொழுதும் மற்றவர்களுக்கு கெடுதல் செய்யக்கூடாது. மற்றவர்களைப் பற்றி மதிப்புக்குறைவான பேச்சுக்களை பேசி அவர்களை மனம் நோகச் செய்யக் கூடாது. நாம் மற்றவர்களை பற்றி எப்பொழுதும் நல்லதாகவே பேசவேண்டும், ஒருபொழுதும் கெடுதலாக பேசக்கூடாது.

நல்ல வாழ்க்கையை நடத்துவதில் தீவிரமாக உள்ள ஒருவன் நமக்கு பெரியோர்கள் எடுத்துக் காட்டியிருக்கும் நல்ல வழிகளை பின்பற்றி நடந்து கொள்வது மிகவும் நல்லது

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள்*

மஹான்கள் தங்களுக்கு எது கிடைக்க வேண்டும் என்று பகவனால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அது கிடைத்தால் போதும் என்று கருதித் திருப்தியுடனிருப்பார்கள். "ஈச்வரன் எது கொடுக்க நினைத்தாலும் அதில் எங்களுக்குத் திருப்தி" என்பார்கள் அவர்கள். இது விஷயம் குறித்து பகவான் கீதையில் முக்கியமானதொரு உபதேசம் கொடுத்துள்ளார்.

யத்ருச்சாலாபஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ விமத்ஸர: ।
ஸம: ஸித்தாவஸித்தௌ ச க்ருத்வாऽபி ந நிபத்யதே ॥

"என்னுடைய கடமையை நான் செய்கிறேன். எந்தப் பலன் கிடைத்தாலும் எனக்குச் சந்தோஷம்தான்" – இத்தகைய பாவனை மனிதர்கள் அனைவருக்கும் இருக்க வேண்டும். இவ்வாறில்லாமல் பலன் இவ்வளவு வர வேண்டும். அவ்வளவு வர வேண்டும் என்று எதிர்பார்த்தால் எந்தவிதப் பிரயோஜனமுமில்லை. ஏனென்றால், நாம் எதிர்பார்ப்பதெல்லாம் நடந்துவிடப் போவதில்லை. ஆகவே, இறைவன் என்ன கொடுக்கிறானோ அதிலேயே ஆனந்தமாக இருப்பது பற்றித்தான் பகவான் கூறினார்.

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்